43 செப்'84

# சுட்டி

50 காசு

மாத இதழ்

## தூக்கு மேடையில் தோழன் பகத்சிங்

- புதிய தொடர்

## நமது எழுமிச்சை மருத்துவம்

- மருத்துவப் பகுதி

## கோமல் சுவாமிநாதன் அவர்களுடன்... பேட்டி.

திரையுலகப் பிரமுகர்கள் வரிசையில்

## கே. பாலச்சந்தர் - விமர்சனம்

FREE E- BOOKS , www.thamizham.net.,




FREE E- BOOKS , www.thamizham.net.,



தூக்குமேடையில்

# தோழன் பகத்சிங்

1

எழுதப் பட்டவைகளைக் காட்டிலும் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மறைக்கப்பட்ட பகுதிகளே ஏராளம்.

அஹிம்சையில் நம்பிக்கை கொண்ட காங்கிரஸ் பேரியக்கமும், ஆயுதப் புரட்சியே வழியெனக் கருதிய தீவிர வாத இயக்கமும், ஒரே முடிவை நோக்கிய இரண்டு பாதைகள். ஆனால், சுதந்திரம் என்பது காங்கிரசால் மட்டுமே நமக்கு சொந்தமாக்கப்பட்டது என்கிற மாதிரி, வரலாறு இங்கே வசதியாய் ஜோடிக்கப்பட்டிருக்கிறது. மொத்த முகமூடிகளையும், காலத்தின் நகங்கள் கிழிக்காமல் விடாது. இங்கே பகத்சிங்கின் கடைசி நாட்களில் நடை பெற்ற சில நம்பிக்கைத் துரோகங்கள், ஆதாரங்களோடு அடையாளம் காட்டப்படுகின்றன.

பகத்சிங்கும், அவனது தோழர்களும், தூக்குமேடையை நோக்கிப் பயணப்பட்டுக்கொண்டிருந்த நேரம்! இவர்கள் வழக்கிலே மட்டும், ஆங்கில அரசாங்கம், அதிசயமான சில வழிமுறைகளைக் கடைப்பிடித்தது. அனைத்துச் செய்திகளும், தந்திகள் மூலமாக மட்டுமே பரிமாறப்பட்டன. எந்தத் தேதியில் அவர்களைத் தூக்கிலிடுவது என்னும் ரகசியம், அரசின் முக்கிய அதிகாரிகள் பலருக்கும் கூட அறிவிக்கப் படவில்லை.

1931ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17ஆம் தேதி, அரசாங்க உள்துறைச் செயலாளரின் அறையில், மிக முக்கியமான ஆறு அரசு அதிகாரிகளின் கூட்டம் நடைபெற்றது. (From Indian National Arceives-Home Dept. File No. 4/21/1931-P. 18). அந்தக் கூட்டம், பகத்சிங்கைத் தூக்கிலிட்ட பிறகு, ஏற்படப்போகும் விளைவுகள் குறித்து, மிகுந்த அச்ச உணர்வோடு ஆலோசித்தது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# சுப. வீரபாண்டியன்

பகத்சிங்கைத் தூக்கிலிடும் தேதி குறித்து, அரசு அதிகாரிகள் லண்டனிலிருந்து இரண்டு தந்திகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். "இன்னும் நான்கு தினங்களுக்குள்" என்று முதல் தந்தியும், "நாளை" என்று இரண்டாவது தந்தியும் லண்டனிலிருந்து வருமென அவர்கள் கூறப்பட்டிருந்தனர்.

மார்ச் மாதப் பின் பாதியில்--

முதல் தந்தி வந்தது!

இந்த நெருக்கடியான நேரத்தில், குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருந்த இந்திய நாட்டு இளைஞர்களை எப்படி அடக்குவதென்பது பிரிட்டிஷ் பேரரசுக்குப் பெரும் பிரச்சனையாயிருந்தது. லண்டனிலுள்ள இந்தியச் செயலாளருக்கு (Secretary of State for India), புதுடில்லியிலிருந்து, வைஸ்ராய், "அவர்களைத் தூக்கிலிட்டதும் தொடரும் நாட்கள் மிகவும் தொல்லை தருவனவாகவே அமையும் போலிருக்கிறது" என்று அவசரத் தந்தி (Express Telegram No. 860-S) கொடுத்தார். அதே தந்தியில், "காங்கிரஸ் கட்சியிலேயே ஒரு பிரிவினர் கூட, பகத்சிங்கிற்கு ஆதரவாகப் போராட்டத்தில் ஈடுபடக்கூடும்" என்னும் செய்தியையும் தெரிவித்திருந்தார்!

சுருக்கமாய்ச் சொன்னால், நாடே வெகுண்டெழுந்து அரசாங்கத்தின் அடித்தளத்தை அசைத்துக் கொண்டிருந்த அற்புதமான நேரம் அது!

20-03-1931 அன்று, சுபாஷ் சந்திர போஸ், பகத்சிங்கிற்கு ஆதரவாக அணிதிரட்டும் பணியில், மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

மக்களின் உணர்ச்சிகளை மழுங்கடிக்கவும், ஆர்ப்பரிக்கும் போர்ப்படைகளை அடக்கி ஒடுக்கவும், ஆங்கில அரசாங்கம் என்ன செய்தது தெரியுமா?

காந்தியின் துணையை நாடியது!

காந்தி துணை போனாரா?

ஆம்! ஆம்!! ஆம்!!! (அடுத்த இதழில் ஆதாரம் வரும்)

FREE E- BOOKS , www.thamizham.net.,

ஈழத்திற்கோர் இலக்கியப் பாலம்

## காந்தளகம்

247, கிருஷ்ணவேணி வீதி, சென்னை-600 029.

தமிழ் ஈழம் தனி நாடு என்பதை வரலாற்றுச் சான்றுகளுடன் விளக்கிடும் இரு அரிய ஈழத்தமிழ் நூல்கள்

**ஈழத் தமிழர் இறைமை**

மு. திருச்செல்வம்: ரூ. 3.

**தமிழ் ஈழம் நாட்டெல்லைகள்**

ஜே. ஆர். சின்னதம்பி: ரூ. 6.

ஈழத்தின் புரட்சிக் கவிஞர்

**காசி ஆனந்தன் கவிதைகள் ரூ. 10.**

மற்றும் ஈழத்தமிழ் நூல்களின் இலவச பட்டியலுக்கு எழுதுக.

நூலின் விலையை மட்டும் பணவிடை செய்க, அஞ்சல் செலவு இலவசம்.


FREE E- BOOKS , www.thamizham.net.,

## பஞ்சாயத்துத் தேர்தலும்

தலைப்பைப் படித்து தலை முடியைப் பிய்த்துக் கொள்ளாதீர்கள்.

மேற்கண்ட இரண்டும் ஒன்றுதான் என்ற உண்மை அனுபவப்பட்டவர்களுக்கு மட்டுமே தெரியும்.

உங்கள் பக்கம் நியாயம் இருந்தும் அஞ்சலக ஊழியரின் தவறால் பாதிக்கப்படுகிறீர்கள். புகார் எழுத விரும்பி 'புகார் புத்தகம்' கேட்டால் கிடைக்காது

நம்மை இருக்கையில் அமரச் செய்து சம்மந்தப்பட்ட ஊழியரிடம் 'கண் துடைப்பு கண்டிப்பு' நடத்தப்படும். நம்மிடம் செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்பதுடன் நலன் பற்றியும் விசாரிக்கப்படும்.

இதே ரீதியில் பேச்சை திசைமாற்றி புகார் புத்தகத்தை கண்ணிலும் காட்டாது அனுப்பப் பார்ப்பார்கள். மீண்டும் புகார் புத்தகம் பற்றி வலியுறுத்தினால் "எங்களை இதன் மூலம் ஒன்றும் செய்ய முடியாது. வேண்டுமானால் S.S.P.க்கு (Senior Suprintendent Of Posts) எழுதிக் கொள்" என வீராவேசமாகப் பேசுவோர், முகவரியைத் தரமாட்டார்கள். (S.S.P.யின் முகவரி யாருக்குத் தெரியும்?)

எந்த நோக்கத்திற்காக இம்முறை ஏற்படுத்தப்பட்டதோ அது முளையிலேயே கிள்ளியெறியப்படுவது வேதனைக்குரியது. இதன் உண்மையான நோக்கம் நிறைவேற

## புகார் புத்தகமும்

புகார் புத்தகம் பொது மக்களின் பார்வையில் படும்படி நடுக்கூடத்தில் வைக்கப்பட வேண்டும்; அல்லது "புகார் ஆலோசனைப் புத்தகம் இங்குக் கிடைக்கும்" என்ற போர்டுக்குப் பதிலாக "உங்கள் புகாரை S.S.P............... என்ற முகவரிக்கு எழுதவும்" என்று எழுதப்பட்ட போர்டு வைக்கப்பட வேண்டும்.

இதனால் பாதிக்கப்பட்டவருக்கு நீதி, நியாயம் கிடைக்கிறதோ இல்லையோ, "புகார் அனுப்பினோம்" என்ற திருப்தியாவது கிடைக்குமல்லவா?


—இளமுருகு

FREE E- BOOKS , www.thamizham.net.,

நான் தான்

# அருளப்பனின் அட்ரேனல்

பேசுகிறேன்



அருளப்பன் கல்யாணம் கட்டியும் பிரம்மச்சாரி. குழந்தைகள் இல்லை என்ற குறை அவனை வாட்டிக் கொண்டிருக்கிறது. அதற்கு பல காரணங்கள் இருந்த போதிலும், அந்த ஆண்மைக் குறைவுக்கு நான் தான் முக்கிய காரணம் என்பது அருளப்பனுக்குத் தெரியாது. முதலில் நான் இருக்குமிடத்தைத் தெரிந்து கொண்டு என்னைச் சரியாக இயங்க உதவி செய்தால் அருளப்பனின் உடலில் விந்தைகள் புரிவேன் அந்த ரகசியத்தைக் கடைசியில் சொல்லுகிறேன்.

அவனுடைய அடிவயிற்றின் பின்புறத்தில் சிறு நீரகங்கள் (KIDNEY) இருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த இரண்டு சிறுநீரகங்களின் தலையிலும் நான் சிறிய முந்திரிப்பருப்பைப் போல ஒட்டிக் கொண்டிருக்கிறேன். இருந்தாலும், சிறு நீரகங்களுக்கும் எனக்கும் தொடர்பு கிடையாது. ஆனால் என் குடும்பத்தைச் சேர்ந்த வேறு இரண்டு சுரப்பிகள் இருக்கின்றன. அவற்றோடு தான் சில விஷயங்களில் தொடர்பு வைத்து கொண்டுள்ளேன். அவை எனக்கு மேலே அருளப்பனின் தலையில் இருக்கின்றன. ஒன்று பிசுடரி; மற்றொன்று ஹைபோதாலமஸ்.

என்னுடைய மேல் ஒட்டிலிருந்து அட்ரேனலின், நோரா அட்ரேனலின் என்னும் திரவங்களும், என்னுடைய உட்பகுதியிலிருந்து கார்டிஸால் போன்ற 40 விதவிதமான திரவங்களும் உற்பத்தியாகி இரத்தத்தில் கலந்து கொண்டே இருக்கின்றன.

FREE E- BOOKS , www.thamizham.net.,

அருளப்பனின் கோபதாபங்களுக்கும் வெறிச் செயல்களுக்கும் அதற்கு வேண்டிய திடீர் பலத்திற்கும் நான் தான் காரணம் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். அந்த திடீர் பலத்திற்கு நான் என்ன செய்கிறேன் தெரியுமா? அருளப்பனின் கல்லீரல் அதிகப்படி சர்க்கரை ஸ்டாக் இருப்பது எனக்கு தெரியும். அதை வேறு சர்க்கரையாக மாற்றி இரத்தத்திற்கு அனுப்புவேன். அருளப்பனுக்கு பலம் வருகிறது.

என்னை சரியாக இயங்க வைக்க உத்திரவாதமான மருந்து கிடையாது. ஆனால் யோகாசனங்களால் நான் சீரடைகிறேன் என்பது உண்மை. அதிலும் குறிப்பாக யோகமுத்ரா, அர்த்த மச்சேந்திரியாசனம், மயூராசனம், தனுராசனம் ஆகியவை ஏற்றவை. வயதானாலும் அருளப்பன் ஷ ஆசனங்களைச் செய்து பார்க்கட்டும்; பலன் நிச்சயம். அடுத்து : மாதவனின் மண்ணீரல் —சுட்டி பாரதி

## மாரடைப்பு ஏற்படாமலிருக்க

ஆரம்பகால முதலே அறுசுவை உணவில் கசப்புச் சுவையை நீக்காமல் உணவில் கலந்துண்ண வேண்டும் — மன உளைச்சல், கவலை கொள்ளுதல், அதிகமான கொழுப்பு சத்துக் கலந்த உணவு வகைகளை உண்ணுதல், அளவுக்கு மீறிய கடுமையான உடலுழைப்பு ஆகியவைகளை கூடிய வரை தவிர்க்க வேண்டும்.

போதையூட்டும் பானங்கள், புகையிலை, சிகரெட் இவைகளை உபயோகிக்காமல் இருக்க வேண்டும்.

எளியமுறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகை [illegible] நூலிலிருந்து

இரண்டே ரூபாயில் எந்த ஐயத்திற்கும் பதில்!

● சட்டம் ● மருத்துவம் ● அரசியல் ● மனோதத்துவம் இவை மட்டுமின்றி வேறு எந்தத் துறையாயினும் உங்களுக்கு ஏற்படும் ஐயங்களுக்கு தனிப்பட்ட முறையில், அஞ்சலில் ஆறுதலான பதில் தருகிறோம். கேள்வி ஒன்றுக்கு ரூ. 2.00 வீதம் பணவிடை அல்லது அஞ்சல் தலை அனுப்புங்கள். [illegible] 1594, [illegible]

## கோவில் கதவுகளை மூடியதால் குடிநீர்ப் பிரச்சனை

திருவாரூர் பெரிய கோவில் புகழ் பெற்ற திருத்தலம். பலர் வந்து போன காலம் மாறி எவரும் வர விருப்பமின்றி அல்லது வழியின்றி ஆகிவிட்டது. பெரும் பாலும் நல்ல குடிநீர் கோவில் கிணற்றிலிருந்து தான் எடுக்க வேண்டும். ஆனால், கொஞ்ச நாட்களுக்கு முன்பு எந்த அறிவிலியோ கோவிலில் ஒரு பெண்ணிடம் முறை கேடாக நடந்து கொண்ட காரணத்தால் கோவிலின் மூன்று கதவுகள் பூட்டப் பட்டு ஆறு மாத காலம் ஆகிறது. மக்கள் குடிநீர் எடுக்க அல்லலுறுகின்றனர். கோடை காலம். குடிநீர் பிரச்சனை பெரும் பிரச்சனை. இந்த அவல நிலையில் பெண்கள் அனுதினமும் துன்ப வெள்ளத்தில் நீந்துகின்றனர். வாயில் புறத்தில் காவல் போட்டு உள்ளனர். அதுபோல் மற்ற மூன்று கோவில் வாசல்களிலும் காவல் போட்டு கோவில் கதவுகளைத் திறந்து குடிநீர் எடுக்க அனுமதித்தால் மக்கள் பிரச்சனை தீரும். —திருவாரூர். இரா. கூத்தரசன். M.A.

# வாசகர் குமுறல்

## ஜோலார்ப்பேட்டை அடையாளமில்லா பேருந்து நிறுத்தம்

வடஆற்காடு மாவட்டத்தின் பெரிய இரயில் சந்திப்பு நிலையம் ஜோலார்ப்பேட்டை. இங்கு நெடுஞ்சாலை அருகில் அமைந்துள்ளது கோடியூர். இந்த இடத்தில் விரைவு பேருந்து (பஸ்) வண்டியினை தவிர எல்லா பேருந்து வண்டிகளும் நின்று செல்கின்றன. ஆனால் இங்கு பேருந்து நிலையத்திற்கான அடையாளமோ, நிழற்கூடமோ இல்லை என்பது வருந்ததக்கது. மேலும் வெளி ஊருக்கு செல்ல பேருந்தில் ஏறுமிடம் ஒன்றாகவும். இறங்குமிடம் ஒன்றாகவும் இருப்பதால் ஊருக்கு புதியவர்கள் தடுமாறு கிறார்கள். இந்தப் பிரச்சனை சம்பந்தப் பட்டவர்களால் கவனிக்கப்பட்டால் பொதுமக்கள் பயன்பெறுவர்.

—சோலை. தண்டபாணி

FREE E- BOOKS , www.thamizham.net.,

சென்னையைச் சுற்றிலும் பல மழலையர் பள்ளிகள் உள்ளன. இவை பெரும்பாலும் ஆங்கில வழி கல்வி போதனா முறையைப் பின் பற்றுகின்றன. இப்பள்ளிகளில் கல்வி கற்கும் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கை மிகவும் மோசமானதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. உதாரண மாக எல்லா பள்ளிகளிலும், கேள்வி பதில், பயிற்சிகள் செய்துள்ள மூல குறிப்புச் சுவடிகளை (Fair note Books) வாங்கி வைத்துக் கொண்டு பரீட்சைக்கு ஒரு வார காலத் திற்கு முன்பாகத் தான் கொடுக்கப்படுகின்றன. இம்முறை கிட்டதட்ட 95% மேலான குழந்தைகளைப் பாதிக்கின்றது என்பது நிர்வாகத்தினருக்கோ, ஆசிரியர்களுக்கோ புரிவ தில்லை. காரணம் கேட்டால் 'மாண்டிச்சேரி முறை என்று கூறுகின்றனர். எனவே மாண்டிச்சேரி முறை என்பதன் அடிப்படை என்ன என்பதையே இவர்கள் அறிய வில்லை என்று தான் நினைக்கத் தோன்றுகிறது.

தங்கள் பள்ளியில் படிக்கும் குழந்தைகள் நல்ல மதிப் பெண்கள் பெறுகிறார்கள் என்பதைக் காட்டுவதற்காக ஆசிரியமார்களே குழந்தைகளுக்கு வினாக்களுக்கான பதிலை சொல்லித்தந்து விடுகிறார்கள்.

# சீரழியும் செல்வங்கள்

பம்மலில ஒரு மாணவன்

நான்காம் வகுப்பில் ஆண்டுத் தேர்வில் தவறி விட் டான். அவனது பெற்றோர்கள் மேற்படி பள்ளி நிர்வாகத் தினரை அணுகி தம் மகனுக்கு கல்வி அறிவே வளரவில்லை. பையனின் Record Sheetயைக் கேட்டு வேறு பள்ளியில் சேர்க்கப் போவதாகக் கூறினார். உடன் அவனது பள்ளி யில் 5-ஆம் வகுப்பிற்கு மாற்றி விட்டதும் மட்டுமன்றி ஆறாம் வகுப்பிற்கும் தாங்களே வேறு பள்ளியில் சேர்த்து விடுவதாகவும் வாக்குறுதி அளித்துள்ளனர்.

வளரும் சமுதாயத்தின் வளங்காக்கும் கல்வி நிலை யங்களாக இவை அமையவில்லை, சத்தியமாக இவை அத்தனையும் வியாபாரத் தலங்களே! பெற்றோர்கள் சிந்தித் தால் ஒழிய சீர் நிலை கிட்டாது என்பது உறுதி...

—பம்மல், செல்வராஜ்

FREE E- BOOKS , www.thamizham.net.,



# இனப்பற்று

## சிறுகதை

பொழுது விடியப்போகும் சமயம், முன் இரவில் தங்களுக்காக இரை தேடச் சென்ற தாய்ப் புலியை எதிர்பார்த்து இரு குட்டிப் புலிகள் காத்திருந்தன. முன் கால்கள் இரண்டையும் நீட்டிச் சோம்பல் முறித்துக்கொண்டே, "இவ்வளவு நேரமாகியும் அம்மாவைக் காணோமே?" என்றது ஒரு புலிக்குட்டி.

"இன்னும் ஒன்றும் கிடைக்கவில்லையோ, என்னமோ?" என்றது இன்னொரு புலிக்குட்டி, நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டே.

"எனக்குப் பசி காதை அடைக்கிறது..."

"எனக்கும்தான் பசி வயிற்றைக் கிள்ளுகிறது"

"எதற்கும் நாம் கொஞ்ச தூரம் சென்று அம்மாவைத் தேடிப் பார்ப்போமா?"

"வேண்டாம், வேண்டாம். 'நான் வரும வரை நீங்கள் குகையை விட்டு வெளியே வரக்கூடாது' என்று அம்மா சொல்லிவிட்டுப் போயிருக்கிறாள்!"

"கடைசி வரை அம்மா வராமலே இருந்து விட்டால்...?"

"என்னை நீயும் உன்னை நானும் சாப்பிட்டு விடுவதா, என்ன?— பேசாமல் இரு; அப்படி வராவிட்டால் அப்புறம் பார்த்துக் கொள்வோம்!" என்று அவற்றில் ஒன்று எரிந்து விழுந்தது.

இன்னொன்று, "அதுவரை பசியோடு இங்கேயே கிடந்து தவிக்க வேண்டுமாக்கும்!" என்று அலுத்துக் கொண்டே, தன் கால் விரல்களில் ஒன்றை லேசாகக் கடித்து, அதில் கசிந்து வந்த ரத்தத்தை நக்கி ருசி பார்த்தது.

அதற்குள் அவற்றின் அம்மா சற்றுத் தூரத்தில் உறுமிக் கொண்டு வரும் சத்தம் கேட்கவே, இரண்டு குட்டிகளும் ஏக காலத்தில் துள்ளிக் குதித்து அதை வரவேற்கத் தயாராயின.

FREE E- BOOKS , www.thamizham.net.,

தாய்ப்புலி தங்களை நெருங்கியது தான் தாமதம்; குட்டிப் புலிகள் இரண்டும் ஏமாற்றம் அடைந்தன. ஏனெனில், அவை எதிர்பார்த்ததுபோல் அம்மாவின் வாயில் எந்த விதமான இரையும் இல்லை.

"ஏன் அம்மா, ஒன்றும் கிடைக்கவில்லையா?"

"கிடைத்தது; அதற்குள் இன்னொரு புலி வந்து..."

"என்ன கிடைத்தது?"

"ஒரு கொழுத்த காட்டுப் பன்றி– தன்பாட்டுக்கு அது ஒரு மரத்தடியில் உதிர்ந்து கிடந்த பழங்களைப் பொறுக்கித் தின்றுகொண்டிருந்தது. நான் அதன் மேல் பாயத் தயாராவதற்குள் இன்னொரு புலி வந்து அதைக் கவ்விக் கொண்டு போய்விட்டது..."

"அதை நீ சும்மாவா விட்டாய்?"

"சும்மா விடாமல் என்ன செய்வதாம்?"

"நீ அதை ஏன் அடித்துக கொன்றிருக்கக் கூடாது?"

"சீசீ, நாம்கூட மனிதர்களா, என்ன?—தன் இனத்தைத் தானே அடித்துக் கொல்ல?—நாம் மிருகங்கள்! மனிதர்களை விட உயர்ந்த மிருகங்கள் — அப்படியிருக்கும் போது நமக்கு நாமே எதிரிகளாக முடியுமா?— அந்தப் பன்றி போனால் இன்னொரு பன்றி!" என்று சொல்லிக் கொண்டே, தாய்ப்புலி மீண்டும் இரை தேடச் சென்றது.

குட்டிப் புலிகள் இரண்டும் தங்கள் பசியை மறந்து, "நாம் மிருகங்கள்: மனிதர்களைவிட உயர்ந்த மிருகங்கள்!" என்று கும்மாளம் கொட்டின.

—நன்றி: விக்தனின் குட்டிக் கதைகள்


வேலையற்ற இளைஞர்களுக்கு ஓர் ஆறுதலான செய்தி

தமிழகத்தின் சில மாவட்டங்களில் சொந்தமாகத் தொழில் தொடங்க அரசு உதவித்தொகை அளிக்க முன்வந்துள்ளது இந்த உதவித்தொகை சில தொழில்களுக்கு மட்டுமே. ரூபாய் 88 கோடி அளிக்கப்பட்டுள்ள தொகையில் மூன்றில் ஒரு தொகை அச்சகம் ஆரம்பிக்க இதுவரை தரப்பட்டுள்ளது. புது அச்சகம் தொடங்குவதற்கான அனைத்து உபகரணங்களும், ஆலோசனைகளும் பெற நம்பிக்கையான இடம்: ரங்கா டைப் பௌண்டரி, 73, ஹண்டர்ஸ் சாலை, வேப்பேரி, சென்னை-600 112 பேசி: 37999, 664293.

விளம்பரம்


FREE E- BOOKS , www.thamizham.net.,

# மோசடி! உஷார்!

சமீப காலமாக, பத்திரிகைகளில், 'இந்த 4 கேள்விகளுக்கு விடை எழுதி அனுப்புங்கள், சரியாக விடை எழுதுபவருக்கு பரிசுப் பொருள் அனுப்பி வைக்கப்படும்' என்றும், அதற்கான தபால் கட்டணத்தையும் நம்மையே அனுப்பி வைக்குமாறும் விளம்பரம் செய்கிறார்கள். இதன் பின் நடக்கும் 'மோசடி'யை, அனுபவப்பட்டவர்களைத் தவிர வேறு யாரும் அறிய நியாயமில்லை. கேள்விகள் ஏதோ சுலபமானதாக உள்ளதே, என்று எழுதி அனுப்பி வைத்தார்களோ! அவ்வளவு தான்! மறுநாள் நீங்கள் வெற்றி பெற்று விட்டதாகவும், பரிசுத்துகைக்கான தபால் கட்டணம் ரூ 25-00 அனுப்புமாறும் கடிதம் வரும். ஏமாந்தவர்கள், சந்தோஷத்தினால் உடனே அனுப்பிவிட்டு பரிசுக்காக காத்திருந்து, மேலும் ரூ. 75/- அனுப்புமாறு வரும் கடிதத்தை பெறுவார்கள். ஏன் பரிசுப பொருளை Pack செய்ய ரூ. 25/- போதாதா என்ன? எனது நண்பர் ஒருவருக்கு இதுபோல் அனுப்பி, தபால் அலுவலகத்தில், பெட்டிக்குள் ஒரு 'பாறாங்கல்' இருந்தது! ஒரு சிலருக்கு அதுகூட வருவதில்லை! ஆம்! 'ஏமாந்தவர்கள்' இருககும் வரை 'ஏமாற்றுபவர்கள்' இருக்கத்தானே செய்வார்கள்! இதுபோல் 'விளம்பரங்களை' பத்திரிக்கைகள் புறக்கண்ணிக்க வேண்டும்! அவர்களுககென்ன? 'விளம்பரத்துகை' வந்துவிடுகிறதே?! 'தரமான விளம்பரங்களை' மட்டுமே பிரிசுரிக்க 'பத்திரிக்கைகள்' முன் வரவேண்டும். இதற்கென்றே ஒரு 'மோசடிக்கும்பல்' கிளம்பியுள்ளது. கூர்ந்து நோக்கினால், இவையாவும் 'டில்லியிலிருந்து' வரும் விளம்பரங்களாகவே இருக்கும். ஏனெனில், அங்குபோய் பார்க்கப் போவதில்லை என்ற தைரியம், அப்பப்பா, 'டில்லி' என்றாலே 'மோசடி' தான் என்று ஆகிவிட்டது. சிறு விளம்பரத்தில் ஆரம்பித்து,'பெரிய' அரசியல்வாதிகள் வரை அதிலேயே ஊறி விட்டார்கள்? உஷார்...! 'டில்லி'யையே புறக்கணிப்போம்! 'மோசடி'யை முறியடிப்போம்;

—S. பாலாஜி

FREE E- BOOKS , www.thamizham.net.,

## நமது எலுமிச்சை மருத்துவம்

குறைந்த விலையில் நிறைந்த பயனைத் தரக்கூடிய பழவகைகளில் ஈடு இணையற்றது எலுமிச்சம் பழம். இதன் மருத்துவப் பலன்களை இப்படி பட்டியலே போடலாம்:-

பித்தத்தைப் போக்கும், தலைவலி தீர்க்கும், மலச்சிக்கல் விலக்கும், தொண்டை வலியைப் போக்கும். வாந்தியை நிறுத்தும், காலராக் கிருமிகளை ஒழிக்கும், பல் நோய்களை குணப்படுத்தும், வாய் நாற்றத்தை போக்கும், சர்ம நோய்களை குணப்படுத்தும். டான்சிலைத் தடுக்கும், விஷத்தை முறிக்கும், வாய்ப்புண்ணை ஆற்றும், தேள் கடிக்கு உதவும், மஞ்சக்காமாலையை நீக்கும், வீக்கத்தை குறைக்கும், வாயுவை அகற்றும், பசியை உண்டாக்கும், விரல் சுற்றிக்கு உதவும், யானைக்கால் வியாதியை குணமாக்கும்.

**ஓட்டலில் சாப்பிடுவோர் கவனிக்க:** ஒட்டல் சாப்பாட்டுக்காரர்கள் சுத்தமற்ற வேகாத சமையலை, உண்ண நேர்வதால் ஏற்படக்கூடிய பல தொல்லைகளை நீக்க 2 எலுமிச்சம் பழத்தைச் சாறு பிழிந்து, நல்லபெருங் காயத்தைர் கலந்து, உப்பு சேர்த்து தினமும் குடிப்பது நல்லது.

**அணுகுண்டு கதிரியக்கத்திலிருந்து தப்ப:** அணு குண்டு சோதனைகள் நடத்துவதால் நீரிலும், காற்றிலும் ஏற்படும் கதிரியக்க அபாயத்தைத் தடுக்கும் ஆற்றல் எலுமிச்சை தோலில் உள்ள 'ப்யோபிளேன்' என்ற சத்தில்! தினமும் எலுமிச்சை உண்பவர்கள் கதிரியக்கத்தைத் தாங்கி தப்ப முடியும். புற்று நோய்க்காரர்களுக்கு எக்ஸ்ரே சிகிச்சையால் ஏற்படும் கதிரியக்கத் தீங்கையும் எலுமிச்சை தடுக்கிறது-

**தாங்க முடியா களைப்பா:** விளையாட்டு, ஓட்டப் பந்தயம், கடுமையான வேலை இவ்ற்றால் ஏற்படும் களைப்-பை நீக்க ஒரு எலுமிச்சப் பழத்தை எடுத்து உடனே கடித்து சாற்றையோ, அல்லது பிழிந்து சர்க்கரை போட்டோ சாப்பிடுங்கள். உடனடி தென்பு ஏற்படும்.

**உண்ணாவிரதம் முறிப்போர்:** மீண்டும் உண்ணும் போது எலுமிச்சை பழச்சாறு அருந்தி உணவு உண்டால் தான் சீரணப் பிரச்சனைகள் நேர்வதைத் தடுக்க முடியும்.

(அடுத்து : நமது சீரக மருத்துவம்)

FREE E- BOOKS , www.thamizham.net.,



# கோமல் சுவாமிநாதன் அவர்களிடம் சில கேள்விகள்

## பேட்டி

★ நாடக, திரைப்படத் துறையில் நாம் முன்னேறிக் கொண்டிருக்கிறோம் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

✷ பிறமொழி நாடக, திரைப்படங்களைப் பார்க்கும் போது நாம் முன்னேறவில்லை. மாறாகப் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம். கலை, இலக்கியமெல்லாம் இங்கு வியாபாரப் பொருளாகி விட்டது.

★ ஒரு திரைப் படததின் வெற்றிக்கு பத்திரிகைகளின் பங்கு அவசியமா?

✷ நிச்சயமாக! அதுவும் முற்போக்குப் படங்களுக்கு மிக அவசியம். இந்தியில் அர்த், அர்த் சத்தியா போன்ற சமுகப் படங்கள் மாபெரும் வெற்றி பெற்றதற்கு முக்கிய காரணம், அங்குள்ள பத்திரிகைகள். இத்திரைப் படங்கள் தயாராவதற்கு முன்பே அது பற்றிய செய்திகளை மக்களிடம் கொண்டு சென்று விட்டன. நமது பத்திரிகைகள் மசாலாப் படங்களைப் பற்றிய செய்திகளுக்குத் தான் அதிக முக்கியத்தும் கொடுக்கின்றன. நமது திரைப்பட விமர்சகர்களும் குறிப்பிட்ட படத்தின் கதைக்கு முக்கியத்துவம் கொடுத்து விமர்சனம் எழுதாமல், திருப்ப திருப்ப குறிப்பிட்ட நடிகர்களைப் பற்றியே விமர்சித்துக் கொண்டிருககிறார்கள். இது வரவேற்கத்தககதல்ல.

★ தீவிரமான சிந்தனைகளை தாங்கிவரும் முற்போக்குப் படங்களை தயாரிக்கும்போது பெரிய சக்திகளின் குறுக்கீடுகள் ஏதேனும் வருகிறதா?

● இல்லை.

FREE E- BOOKS , www.thamizham.net.,

★ நீங்கள் எப்போதிலிருந்து கம்யூனிஸ்டாக மாறினீர்கள்?

● "நான் கம்யூனிஸ்ட்" என்று நான் எப்போது சொன்னேன்? நான் எந்த கம்யூனிஸ்ட் கட்சியிலும் உறுப்பினர் இல்லை. மார்க்ஸ், எங்கல்ஸ் நூல்களைப் படித்த பிறகுதான் என்னுள் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அது எந்த வருடம், மாதம், நாள் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. எனது சிந்தனைகளின் வளர்ச்சியே எனது சமூக பிரஞையை வெளிப்படுத்தும் படைப்புகள்தான்.

★ தண்ணீர் தண்ணீர், அனல் காற்று, ஓர் இந்தியக் கனவுப் போன்ற முற்போக்குப் படங்களைக் கொடுத்த "கோமல்" "யுத்தகாண்டம்" என்கிற மசாலாப் படத்தைக் கொடுத்ததேன்?

● "யுத்த காண்டம்" ஒரு மசாலாப் படம் அல்ல. இதில் இளம்நெஞ்சங்களில் காமத்தைத் தூண்டும் சேஷ்டைகள் ஏதுமில்லை, மனித எண்ணங்களை நகைச்சுவையோடு சொல்ல ஒரு படம் பண்ண விரும்பினேன். அதுவே-"யுத்த காண்டம்".

★ சிறு முற்போக்குப் பத்திரிகைகள் பற்றி?

● நமது சிறு முற்போக்குப் பத்திரிகைகளை நான் ஒன்று விடாமல் படிக்கிறேன். தேங்கிக் கிடக்கும் சாக்கடை நீரை வெளியேற்றும் முயற்சியில் இப் பத்திரிகைகள் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்றன. இன்றைய காலக்கட்டத்தில் இவைகளின் பணி மகத்தானது. சிறு வட்டம்தானே என்று இவைகளை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. சிறு துளிதான் பெரு வெள்ளமாக மாறமுடியும். நம்பிக்கையை தளரவிடக் கூடாது.

★ திரைப் படங்களில் ஆபாச வசனம், பாடல்கள் எழுதுபவர்கள் மக்கள் இதை விரும்புகிறார்கள், ஆகையால் நாங்கள் இதைக் கொடுக்கிறோம் என்கிறார்கள். இது உண்மையா?

● இது சுத்தப் பொய். ரசிகர்கள் யாரும் இரு பொருள் வசனம், பாடல் இருந்தால்தான் படம் பார்ப்பேன் என்று சொல்லவில்லை, அப்படி பார்த்தால் அன்று 'பாவமன்னிப்பும்' 'பாசமலரும்' வெற்றிப் பெற்றிருக்க முடியாது. படங்களில் ஆபாசம் அதிகரித்திருப்பதற்கு முக்கிய காரணம் படைப்பாளர்கள்தான். பழியை ரசிகர்கள் தலையில் போடுவது அயோக்கியதனமானது. ➡

FREE E- BOOKS , www.thamizham.net.,

★ சமூக விழிப்புணர்வுக்கு நாடகங்கள், திரைப் படங்களின் பங்கு அவசியமானதா?

● நிச்சயமாக, நாடகங்களை விட திரைப்படங்களின் பங்குதான் அவசியம். நம் நாட்டில் 90% மக்களின் பொழுது போக்கே திரைப் படம்தான். திரைப்படங்கள் மிகச்சிறந்த மக்கள்தொடர்பு சாதனமாகும். ஓரிருவர் முற்போக்குப் படங்களை எடுத்துக் கொண்டிருந்தால் போதாது. பலரும் ஒன்றிணைந்து ஒரு இயக்கமாக மாறி சாதனைகளை நிகழ்த்த வேண்டும். இதற்கு எத்தனைப் பேர் தயார்?

—சி. இரகுராமன்.


## இங்கே இருக்கிறது

ஓ..
கோடிக் கணக்கான
கோயில் உண்டியல்களே...
கொஞ்சம் உங்கள்
திருவாய் திறவுங்களேன்...
இருக்கும் சில்லறைகளை
எங்களிடம் கொடுத்துவிட்டு
பணத்தை மட்டும்
பத்திரப்படுத்துங்களேன்!

-இரண்டாம் நக்கீரன்

## ஓர், ஏழையின் ஏக்கம்

மேனி கருக்க,
உப்பு நீர் சுரக்க,
நாங்கள்
நாள் முழுதும்
உழைத்தாலும்
உறுப்படியாய்
உணவில்லை!
ஆனால்?...
உலகின்
ஒரு நிமிட
ராணுவச் செலவு
பதிமூன்று கோடியாமே!...



-இராஜாதி

## அரசியல் வேதாளங்கள்

அடையாளம் தெரிகிறதா?
இவர்கள்... இங்கே
வாக்குறுதி களை' விதைத்து
வாக்குகளை அறுவடை
செய்தே
வசந்தத்தின்
சொந்தக்காரர்களாய்
உருமாறிப் போனவர்கள்!
இவர்களை .. இங்கே
வெட்டி வீழ்த்துவதற்கு
வீடுகள்தோறும்
விக்ரமாதித்தன்கள்
வெளிக் கிளம்பாததால்
மீண்டும் மீண்டும்
முருங்கை மரம் ஏறிக்
கொண்டு
பழங்கதைகள் சொல்லியே
பலகாலம் வாழ்ந்துவரும்
கிழட்டு வேதாளங்கள்;

—பாலாஜி

FREE E- BOOKS , www.thamizham.net.,



# இவர் ஓர் அரசு ஊழியர்

நாற்பது வயதில் ஓர் இளைஞர். அவசர அவசரமாக அலுவலகம் வருவார். அலுவலகத்தில் நுழைந்தவுடன் அலுவலக மின் விசிறியை அதிக வேகத்துடன் சுழல விடுவார். அரசாங்கச் செலவு தானே! சிறிது நேரம் கழித்து தலை வாரிக் கொள்வார். அலுவலகப் பையனை ஒரு அதட்டல் போட்டு, காப்பி வாங்கி வரச் சொல்வார். தன் சட்டைப் பையைத் துழாவி மனைவி கொடுத்து அனுப்பிய துண்டுக் கடுதாசியை எடுத்துப் பிரித்து இன்று வாங்கி வரச் சொன்ன வீட்டுச் சாமான்கள் என்னென்ன என்று ஒரு முறை நினைவில் நிறுத்திக் கொள்வார். தொலை பேசியுடன் சிறிது நேரம் அளாவல். பின்பு சிறிது நேரம் அலுவலகப் பணியில் கவனம் செலுத்தும் போது, அவரைத் தேடி சில அரட்டை இளைஞர்கள் அருகில் வர அத்தோடு வேலையைப் போட்டுவிட்டு இன்றைய சினிமா, அரசியல், கவர்ச்சி நடிகைகள் பற்றிய கிசு கிசுப்புக்கள்... மதியம் என்ன சாப்பாடு இப்படி வேண்டாத வேலைகள் பற்றிய விஷயங்களை ரொம்பவும் வேண்டியது போல் ரொம்பவும் அக்கறையோடு பேசிக் கொண்டிருப்பார். அலுவலகத்திற்கு வரும் நபர்களின் தேவைகளை, அதாவது, ''இதை எப்படி பூர்த்தி செய்ய வேண்டும்?'', ''இதை எங்கு செலுத்த வேண்டும்'' போன்ற கேள்விகளுக்கு, பதிலாக நாய் போல் எரிந்து விழுவார். இப்படியே மதியம் ஆகிவிடுகிறது. சாப்பிட்டுவிட்டு கொஞ்ச நேரம் தூக்கம். பின்பு ஒரு காப்பி. கொஞ்ச நேரம் தலையலங்காரம். மணி நான்கு. இதோ, இன்றைய அலுவலக வேலையை முடித்துவிட்டு புறப்பட்டு விட்டார். அவர் ஓர் அரசு ஊழியர்.

—மதுரை. எஸ். மூர்த்தி

FREE E- BOOKS , www.thamizham.net.,



# கேட்க வேண்டிய கேள்விகள்

★ நான் ஊனமுற்றவன்! பெயரளவில் எனக்குப் போலி ஆதரவுதான் காட்டுகிறார்கள். என்னைப் போன்றவர்கள் உயர முடியுமா?

ஆங்கிலப் பெருங்கவி மில்டன் ஒரு குருடன்; இசை மேதை பீதோவன் ஒரு செவிடன், பேரரசன் ஜூலியஸ் சீசர் காக்காய் வலிப்புக்காரன்; புது நாடு கண்ட கொலம்பசுக்குப் பிறவியிலேயே ஒரு பாதம் சூம்பி இருந்தது. சிந்தனைச் சிற்பி ரூசுவெல்ட்டுக்கு கையில் ஊனம். உங்களுக்கு?

★ மாநகராட்சிகளே தனியார் கையில் விடாமல் தாங்களே பொறுப்பாக வாகன ஸ்டாண்டுகளைப் பத்திரமாக பராமரித்தால் என்ன?

சென்னை பூக்கடை காவல் நிலையம் அருகே உள்ள பெரிய வாகன நிறுத்தப் பகுதியை மாநகராட்சி பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளது. ஆனால் பொறுப்பாக பத்திரமாகவா? அவர்கள் தரும் சீட்டில் 5-வது விதி:-

"வண்டி நிறுத்தப்பட்டுள்ள காலத்திற்குள், வண்டிக்கு ஏற்படுகின்ற சேதத்திற்கோ அல்லது திருட்டுகளுக்கோ மாநகராட்சியோ, அல்லது நிறுத்துமிட அலுவலரோ பொறுப்பல்ல" - இந்தப் பொறுப்பற்ற பகுதியில் 2 சக்கர வாகனங்கள் நிறுத்த மணிக்குக் கட்டணம் 50 காசு கூசாமல் வசூலிக்கிறார்கள்.

★ "எத்தனை காலம்தான் போராடுவது" என்று மனம் சோர்ந்துபோகும். சில துடிப்புள்ள இளைஞர்களுக்கு உங்கள் ஆறுதல் என்ன?

கடலால் அலைக்கழிக்கப்பட்ட பாறை கேட்டது: "உன்னுடன் எத்தனையோ காலம் வாழ்ந்து விட்டேன். ஆயினும் "நான்" என்றால் என்ன என்று - நீ எனக்குக் கற்றுத்தரவே இல்லை"

பாய்ந்து வந்த கடல் அலை சொல்லியது: "இயங்கினால் நான் வாழ்கிறேன். நின்றால் நான் செத்துவிடுவேன்"

FREE E- BOOKS , www.thamizham.net.,

★ கவிஞர் கண்ணதாசனின் கிருஷ்ண பக்திக்கு காரணமான சூழல் என்ன?

கவிஞர் கண்ணதாசனே சொல்கிறார்: "பிரம்மச்சாரி பிள்ளையாரையும், ஒரு மனைவி உள்ளவன் இராமனையும், இரண்டு மனைவி உள்ளவன் முருகனையும், பல மனைவி உள்ளவன் கிருஷ்ணனையும் வணங்க வேண்டும். எனவேதான் கிருஷ்ணனை வணங்குகிறேன். கிருஷ்ண பக்தர்களாக வேண்டுமானால் இப்படியொரு தகுதி வேண்டும்போலிருக்கிறது. எதற்கும் இங்கு கடவுளியம் கேடயமாகும்!

## ஓர் உருப்படியான செலவு?

ஈரான் - ஈராக் இரு நாடுகளுக்கிடையே கடந்த 1980 செப்டம்பர் மாதத்தில் இருந்து போர் நடந்து வருகிறது. இப்போரின் மூலம் இருநாடுகளும் கடுமையான பொருளாதார நெருக்கடி பெற்றுள்ளன.

1981 செப்டம்பரில் இருந்து 1983 மார்ச் வரை ஈரான் போரில் இழந்த தொகை 164000 கோடி ரூபாய். இதில் எண்ணெய்க் கம்பெனிகளில் ஏற்பட்ட இழப்பு 54000 கோடி ரூபாய், விவசாயத் துறையில் இழந்தது 41000 கோடி ரூபாய் ஆகும். இப்போரின் மூலம் இருநாடுகளும் சாதிக்கப்போவது அழிவைத் தவிர வேறு என்ன?

## நாட்டின் முதுகெலும்புகள் வளைந்துள்ளனவா?

சென்ற 1983-ம் ஆண்டு இந்தியத் திருநாட்டில் கதவடைப்பு செய்த தொழிற்சாலைகளின் (பெரிய) எண்ணிக்கை 394. இக்கதவடைப்பினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 2,26,424 ஆகும். இவர்கள் நேரடித் தொழிலாளர்கள். இத் தொழிற்சாலையின் மூலம் மறைமுக தொழிலாளர்களாக இயங்குபவர்கள், அவர்களின் குடும்பம் என்று பார்த்து கணக்கிட்டால் கோடியை எட்டிவிடும். பாரதப் பிரதமருக்கு எந்த மாநில ஆட்சியைக் கவிழ்க்கலாம். விலைக்கு எம்.எல்.ஏக்களை எவ்வாறு வலை வீசலாம் என்ற கவலையே அதிகமாக இருக்கும் போது இது போன்ற கதவடைப்பு ஏன் வருகிறது என்று எண்ண ஏது நேரம்?

—எஸ். ஏ. குமாரன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

## சு. சமுத்திரத்தின்
## சமூகப்பார்வைமிக்க நூல்கள்

| | |
|---|---|
| சமுத்திரம் கதைகள் | 7-25 |
| இல்லந்தோறும் இதயங்கள் | 12-00 |
| காகித உறவு | 5-75 |
| ஒரு சத்தியத்தின் அழுகை | 6-00 |
| வளர்ப்பு மகள் | 7-00 |
| வேரில் பழுத்த பலா | 12-00 |
| உயரத்தின் தாழ்வுகள் | 6-50 |
| நெருப்புத் தடயங்கள் | 18-00 |
| புதிய திரிபுரங்கள் | 8-25 |
| ஊருக்குள் ஒரு புரட்சி (பரிசு பெற்றது) | 9-00 |

**மணிவாசகர் நூலகம்**

புத்தகம் வெளியிடுவோர், 89, லிங்கிச் செட்டித் தெரு,
சென்னை-600 001.
போன் : 512996

## நீங்களும் சிறந்த வைத்தியராக!

அன்புடையீர்! வணக்கம்.

நீரிழிவு, தலைமுடி உதிராதிருக்க, சரும நோய்கள், தொழுநோய், புற்றுநோய், ஆஸ்துமா, ஆண்மைக் குறைவு, மாரடைப்பு, அல்சர், மஞ்சள் காமாலை, ஈஸ்னோபீலியா, மாதவிடாய் கோளாறுகள், மலச் சிக்கல், மூளைச்சுரம், B.P., T.B., V.D. போன்ற எவ்வகை பிணியுள்ளவர்களும், தீங்கு விளைவிக்காத, மிகமிக எளிதில் எங்கும் கிடைக்கக்கூடிய மூலிகைகளைக் கொண்டு மாத்திரை செய்து உட்கொண்டு வியக்கத்தக்க வகையில் குணமடையலாம். பலன் உறுதி.

மாத்திரை தயாரிப்பு & உபயோக முறை விபரம் புதிய ஐந்தாம் பதிப்பு "எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்" என்ற நூலில் உள்ளன.

இப்புத்தகத்தைப் பதிவு தபாலில் பெற ரூ. 14-00ஐ 'நர்மதா பதிப்பகம்' சென்னை-17 என்ற முகவரிக்கு M.O. அனுப்புங்கள். ஹிக்கின் பாதம்ஸ் போன்ற பிரபல புத்தக கடைகளிலும் கிடைக்கும். V.P.P. இல்லை.

FREE E- BOOKS , www.thamizham.net.,



பாலச்சந்தரின் திரையுலக சாதனைகளுக்கு பல்வேறு காரணங்களும் பின்னணிகளும் உண்டு. இவை பூகோள ரீதியானவை. பாரம்பரியமானவை. வர்க்க ரீதியானவை. அனைத்திற்கும் மேலாக சமுதாய ரீதியானவை. சோறு படைத்த சோழ நாட்டில் சகல கலைகளாலும் செழித்தோங்க முடிந்தது என்பது சரித்திர வகைப்பட்ட உண்மை. காவிரியின் கரையோர வரப்புகளை காலால் மட்டுமே தள்ளி காலம் கழித்த செல்வச் சீமான்களின் சீராட்டத்தால் இக்கலைகள் வளர்ந்தன. சென்னையை அடுத்துள்ள செங்கையிலோ வடஆற்காடு, தென் ஆற்காடு-தர்மபுரி உட்பட சேலம் வரை போன்ற பிரதேசங்களிலோ இத்தகைய வாய்ப்புகள் இல்லாததற்கு காரணம், இன்றும் கூட இவை வயிற்றுப் போராட்டத்திற்கு அலைந்து கொண்டிருப்பது தான்.

கர்நாடக சங்கீதத்தின் காரணகர்த்தா தியாகராஜர் முதல், நடனம், நாதஸ்வரம், மிருதங்கம், இலக்கியம் போன்ற சகல துறைகளுக்கும் அனைத்திந்திய புகழ்பெற்ற வித்தகர்கள் இங்கே உருவானார்கள். பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், வழுவூர் துரைசாமி ஐயர், பம்மல் சம்பந்த முதலியார் ராமையதாஸ், கலைஞர் கருணாநிதி, ஜெமினி, சிவாஜி, கோமல், ராஜேஷ் உட்பட இந்த பட்டியல் மிகவும் நீண்டது! இதர மாவட்டங்களில் பல அற்புதமான கலைஞர்கள் உருவான போதிலும், தமிழ்நாட்டில் பெரும்பாலோர் தஞ்சையை

திரையுலகப் பிரமுகர்கள்: 2

# இயக்குநர் கே. பாலச்சந்தர்

FREE E- BOOKS , www.thamizham.net.,

சுற்றியே உருவாகியிருக்கிறார்கள். பாரம்பரியத்தால் மட்டுமின்றி சுற்றுப்புற சூழலால் உழைப்பாளிகள் மத்தியிலும் புதிய புதிய கவிஞர்கள், கலைஞர்கள் உருவானார்கள். இந்த மாவட்ட மண்ணின் பல்லாண்டு கால கலைத்தன்மை பாலச்சந்தருக்குப் பெரிதும் உதவியது. மன்னர் பரம்பரையோ மிகப் பெரிய நிலப்பிரபுத்துவ பாரம்பரியமோ இன்றி காணிப்பால் சவுக்கடிகளுக்கு ஆட்பட்டு அடிமையாகி கூனிக்குறுகி நிற்கும் ஏழை எளிய விவசாயியாகவும் இன்றி படித்த நடுத்தர வர்க்கத்தின் பிரதிநிதியான பாலச்சந்தருக்கு கலாரசனையுடன் அறிவார்ந்த கண்ணோட்டமும் இணைந்தது. பட்டதாரி ஆசிரியராக பணியாற்றிய போது பல மாணவர்களின் கேரக்டர்களை நுணுக்கமாய் ஆராயும் வாய்ப்பு இவரது பாத்திர வார்ப்புக்கு கை கொடுத்தது.

பட்டதாரி ஆசிரியர் பொறுப்பை விட்டுவிட்டு பல நாகரிகப் பழக்கம் நிறைந்த சென்னை நகர பிரவேசம், ஏறக்குறைய தன்னைப் போலவே பொருத்தமாய் அமைந்த நண்பர்களின் சேர்க்கையும் இவரது கலா ரசனையை விசாலமாக்கியது. இதோ! வருங்கால வெள்ளித் திரையின் திசை வழியை மாற்றியமைத்த ஒரு மாபெரும் கலைஞர் உருவாகி விட்டார்!

திரையுலகப் பிரவேசத்தைப் பொறுத்தவரை பாலச்சந்தருக்கும் இதர கலைஞர்களுக்கும் அடிப்படையிலேயே ஒரு வித்தியாசம் உண்டு. ஸ்ரீதர், கோபால கிருஷ்ணன், சங்கர், போன்றவர்களோ, சிவாஜி, எம். ஜி. ஆர் உட்பட பல புகழ் பெற்ற கலைஞர்களோ அத்தொழிலின் கடை கோடி நிலையிலிருந்து-அடியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக பரிணமித்தார்கள். உதவியாளனாக, பாய்ஸ் கம்பெனி நடிகனாக படிப்படியாக முன்னேறி உச்சியை எட்டிப் பிடித்தனர். ஆனால் பாலச்சந்தர் அப்படி அல்ல. திரையுலகிற்கு புற ரீதியாக பக்குவம் பெற்று அதில் ஏற்பட்ட அனுபவ முத்திரையின் விளைவாக படைப்பாளியாக மலர்ந்தவர். கொஞ்சம் கொஞ்சமாக விடை பெற்றுக்கொண்டிருந்த நிலப்பிரபுத்துவத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, நவநாகரீக முதலாளித்துவ சிந்தனைகள் இதன் மூலம் திரையைத் தழுவின எனலாம். பாலச்சந்தரின் பிரவேம் சற்று எளிமை

FREE E- BOOKS , www.thamizham.net.,

யாக இருப்பதற்கு ஏற்ப திரையுலகம் அப்போது கொஞ்சம் தயார் நிலையிலேயே இருந்தது. இதற்கு காரணமானவர்கள் ஸ்ரீதரும். கே. எஸ். கோபால கிருஷ்ணனும்.

பாட்டாளியின்சபதம், ஏழைபடும் பாடு, தேவதாஸ் போன்ற அடித்தட்டு மக்களின் அல்லல்களை சித்தரித்த படங்களெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வெறும் ரசனைக்காகவே ஏராளமான படங்கள் வெளிவந்தபோது வாழ்க்கையின் ஏதாவது ஒரு அம்சத்தை கே.எஸ்.ஜி., ஸ்ரீதரின் படங்கள் தொட்டுக்காட்டத் துவங்கின. ஸ்ரீதர் அடிப்படையிலேயே இளமைக்கால காதலுக்கே முக்கியத் துவம் அளித்தார். அக்காதல் தற்போதைய சூழலில் ஏதாவது

ஒரு காரணத்தால் தோல்வி அடைந்து விடுவதை சித்தரித்தார். வர்க்க ரீதியாகவோ, சமுதாய ரீதியாகவோ முழு பிரக்ஞை யுடன் இவர் இவைகளைப் படைக்கவில்லை, என்றாலும் யதார்த்தத்தின் அடிப்டையைத் தொட்டு நின்றன. கோபால கிருஷ்ணனோ சற்று மாறுதல் செய்தார். மனிதர்களுக் கிடையேயுள்ள உறவுகள், கோபதாபங்கள், குடும்ப பிரச் சினைகள் போன்றவைகளை உணர்வுபூர்வமாக சித்தரித்தார். பாசம், அன்பு, விசுவாசம் போன்ற உணர்வுகளால் மட்டுமே ஒரு குடும்பத்தை ஒன்றுபடுத்திவிட முடியும் என்று இவர் நம்பினார். இது சாத்தியமற்ற எதிர்பார்ப்பு என்றாலும் ஆரோக்கியமான சிந்தனை எனலாம்.

பாலச்சந்தரின் படம், ஆரம்பத்திலேயே சற்று வித்தி யாசமாய் இருந்தது. சம்பவங்களை மட்டுமே சித்தரிக்காமல் அதன் காரணி களையும் விளைவுகளையும் தொட்டுக் காட்ட முயன்றது — முக்கியமான மன நெருக்கடிகளையும், உளைச்சல்களை யும், சுட்டியது. அனைத்திற்கும் மேலாக கண்களுக்கும், உணர்வுகளுக்கும் மட்டு மின்றி சிந்தனைக்கும் வேலை கொடுத் தது. இதன் மூலம் திரையுலகின் அறி வார்ந்த அந்தஸ்த்தை இவர் உயர்த்தி னார் எனலாம். (தொடரும்)



—[illegible]

FREE E- BOOKS , www.thamizham.net.,

# மரணமே, வாழவிடு!

புதுடில்லி ஸப்தர்ஜங் மருத்துவ மனையில் தீப்புண்களோடு 'ரீத்தா சந்தா' என்ற இருபத்தொரு வயதான பெண் சேர்க்கப்பட்டாள்.

சில மாதங்களுக்கு முன் 'ரீத்தாவிற்கு திருமணம் நடந்தது. திருமணத்தின்போது வரதட்சணை'யாக பணம் மட்டுமல்ல, 'டெலிவிஷன்' 'மோட்டார் சைக்கிள்' முதலியவை கொடுக்க வேண்டியிருந்தது. இவ்வளவு வாங்கியும் அவளது கணவன் வீட்டாருக்கு 'வரதட்சணை மோகம்' தணியவில்லை. விளைவு? வழக்கம் போல் ஸ்டவ் வெடித்தது கர்ப்பிணியான ரீத்தா பற்றி எரிந்தாள். பின் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள்.

இந்தக் கொடுமையை அறிந்த டெல்லி 'ஜன நாயக மாதர் சங்கப்' பெண்கள் மருத்துவமனைக்கு விரைந்தனர் ரீத்தாவைக் காப்பாற்ற 'இரத்தம்' தேவை என்றார் டாகடர். செய்வதறியாது நின்ற அவள் பெற்றோரிடம் ஆறுதல் கூறிய மாதர் சங்கப் பெண்கள், டாக்டர் முன் வரிசையாக நின்று ''எங்களின்'' யாருடைய இரத்தத்தை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். ''ரீத்தாவை காப்பாற்றுங்கள்'' என்றனர். மாதர் சங்கத்தைச் சார்ந்த 'மஞ்சுரி' என்ற கல்லூரி மாணவியின் இரத்தம் எடுக்கப்பட்டது. ரீத்தா உயிர் பிழைத்தாள்.

மாதர் சங்க ஊழியர் இத்துடன் நிற்கவில்லை ரீத்தாவை இந்த அவல நிலைக்கு ஆளாக்கிய அவள் கணவன் வீட்டின் முன்பு ஒரு பெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மருத்துவமனையில் புத்துயிர் பெற்ற ரீத்தா உணர்ச்சி மேலிட கூறினாள், ''எனக்கு கிடைத்த அனுபவம் வேறு எந்த பெண்ணுக்குமே நேர்ந்துவிடக் கூடாது. மரணமே என்னை கொன்றுவிடாதே. மாதர் சங்கத்தில் சேர்ந்து செயல்பட ஒரு நாளைக்காவது என்னை நடக்கவிடு—வாழவிடு''.

நன்றி : சிந்தனை

FREE E- BOOKS , www.thamizham.net.,

# எத்தனை அவலங்களோ!

சிறு குழந்தை விழ குழியைத் தோண்டி வைத்து விட்டு அதனருகில் சென்று விளையாடாதே என்று சொல்வதைப்போல இருக்கின்றது. கள், சாராயக் கடைகளைத் திறந்து விட்டு குடிக்காதே என்று சொல்வது.

"மதுவிலக்கை ஒரு காலத்தில் கொண்டு வந்தே தீருவேன்", என்கிறார் நம் முதல்வர். ஆனால், எப்பொழுது? "அடுத்த வருடமே" என்றார் எம்.ஜீ.ஆர். ஆனால் அடுத்த வருடமே எம்.ஜீ.ஆர். நினைக்குமளவு மதுவில் வரும் வரும்படி வேறு வழிகளில் தமிழக அரசுக்கு வரும் என்று நம்புவது பகற்கனவு. ஆக, இது "பஞ்சாயத்துத் தேர்தல் சமாசாரம்", என்று கொள்ளலாம்.

சரி... தற்போதைய நிலையில் இதற்கு மாற்று என்ன? ஊரை விட்டுத் தள்ளித்தான் கள், சாராயக்கடைகள் இருக்க வேண்டும் என்று கடுமையான சட்டம் கொண்டு வரலாம். நிற்க, பள்ளி, கோயில், ஆஸ்பத்திரிகள் அருகில் இக்கடைகள் இருக்கலாகாது என்பது சட்டம். ஆனால், பார்க்க வேண்டியவர்களைப் பார்த்துக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்தால் சட்டம் என்ன சட்டம்? கோவையில் பள்ளி, கோயில், ஆஸ்பத்திரி இவற்றினருகில் இக்கடைகள் இருப்பது சகஜம். இன்னும் பல பெரு நகரங்களில் இது உண்மை என்பதும் தங்களுக்குத் தெரிந்திருக்கும்.

மக்களுக்கு நன்மை செய்யும் உண்மையான எண்ணமிருந்தால் அரசு இன்னுமா தாமதித்திருக்கும்?

—நா செந்தில் முரளி


அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத்தகுந்த அளவுக்கு தரமான அப்பளம், வடகம் போன்றவற்றை தயாரித்து தொடர்ந்து சப்ளை செய்ய விருப்பமுள்ளவர்களும், ஷாம்பு தொழிற்சாலை ஒன்றினை சென்னையில் துவக்க அத்தொழிலில் முன் அனுபவம் உள்ளவர்களும் அவர்களைப் பற்றிய முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

மைதிலி மோகன், , திருவள்ளுவர் தெரு,
இராமாபுரம், அம்பத்தூர், சென்னை-600 053.


FREE E- BOOKS , www.thamizham.net.,

# குலுக்கல்

ஆம் பரிசுச்சீட்டுக்கள் நாட்டையே குலுக்குகின்றன. ஒவ்வொரு மாநிலமும் நேரடியாகவே ஏஜெண்டுகள் மூலமாகவும் ஏராளமான பரிசுச் சீட்டுக் குலுக்கல்களை நடத்தி வருகின்றன. இது தவிர விமானப்படை; கடற்படை; உடல் ஊனமுற்றோர் போன்ற நிறுவனங்களும் குலுக்கல் நடத்த அங்கீகாரம் பெற்றுவிடுகின்றன. குறுக்கு வழியில் கோடீசுவரர்களை உற்பத்தி செய்கின்றன.

பூடான், அருணாசலபிரதேசம் போன்ற சின்னஞ்சிறு பகுதிகள் பரிசுச் சீட்டுகளிலேயே காலந்தள்ளி வருகின்றன. வடமாநிலப் பரிசுச் சீட்டுகளில் ஆங்கிலத்தோடு தமிழ் மட்டும் தான் அச்சிடப்படுகிறது. பரிசுச் சீட்டுகளுக்கு தமிழ் நாட்டில் தான் நல்ல மார்க்கெட் அவை அச்சிடும் பரிசுச் சீட்டுகளில் பாதிக்குமேல் தமிழ் நாட்டிலே விற்பனையாகி விடுகிறது. அதிலும் கோவை, மதுரை, தஞ்சை இம்மூன்று மாவட்டங்களில் பரிசு சீட்டு வியாபாரம் கடுமை.

பலர் தம் வருமானத்துக்குமேல் பரிசுச் சீட்டு வாங்குகிறார்கள். தினமலர், தினத்தந்தி, மாலைமுரசு போன்ற பத்திரிகைகளில் பாதி அளவுக்குப் பரிசுச் சீட்டு விஷயங்களே. இந்த விளம்பரங்களுக்கு உச்சவரம்பே (Ceiling) கிடையாதா?

இப்படி ஏன் தமிழ் நாட்டில் மட்டும் அதிகமாக இருக்கிறது. சுலபமாகப் பெரும் பணம் பெற்றுவிட வேண்டும் என்ற ஆசையே அதற்குக் காரணம். விற்பனை செய்வதில் ஆயிரக்கணக்கானவர் பிழைக்கிறார்கள் என்றால் இது ஒன்றும் பெரிய வியாபாரமாகக் கருதப்பட மாட்டாது. இளைஞர் உள்ளத்தில் அல்லாவுதீன் விளக்கு போன்ற ஒரு பிரமையை ஏற்படுத்தி, பகற்கனவு ம் ஒரு படுசோம்பேரிச் சமுதாயத்தை உருவாக்கி விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சோஷலிஸ சமுதாயம் அமைப்போம் என்று சொல்லிக் கொண்டு ஒரு புறம் கோடீசுவரர்களை உற்பத்தி செய்து கொண்டிருந்தால் பிரச்சனை தீர்வது எப்போது?

—கட்டிபாரதி

FREE E- BOOKS , www.thamizham.net.,

# சிறிய வயதில் அரிய சாதனைகள்

1. 15-வது வயதில் கிரோஷியாப் முதன் முதலில் கலைக் களஞ்சியம் (என்ஸைக்ளோ பீடியா) ஒன்றை அச்சிட்டு வெளிக்கொணர்ந்தார்.
2. 16-வது வயதில் கிரேக்க வீரர் மகா அலெக்ஸாண்டர் தன் தந்தையின் படைகளுக்குத் தலைமை வகித்து நடத்தினார்.
3. 17-வது வயதில் பைசா நகரத்தின் சாய்ந்த கோபுரத்தைப் பற்றிய உண்மைகளை கலிலியோ கண்டுபிடித்து வெளியிட்டார்.
4. 18-வது வயதில் பிரெஞ்ச் படைகளுக்கு தலைமை வகித்து, போர் முரசு கொட்டினாள் ஜோன் ஆஃப் ஆர்க் என்னும் வீரமங்கை.
5. 19-வது வயதில் ஜார்ஜ் ஸ்டீபன்ஸன் நீராவி மூலம் ஓடும் ரயில் என்சினை உருவாக்கித் தந்தார்.
6. 20-வது வயதில் வாஷிங்டன் இர்வின் புரட்சி மிகுந்த கருத்துக்களை தன் கட்டுரையின் மூலம் விளக்க ஆரம்பித்தார்.
7. 21-வது வயதில் பெதோவன் சங்கீத உலகின் சிகரத்தை எட்டினார் தம் சாதனையின் மூலம்.
8. 22-வயதில் நோபல் பரிசை ஏற்படுத்திய ஆல்ஃபிரட் நோபல் வெடி மருந்தைக் கண்டுபிடித்தார்.
9. 23-வது வயதில் ஜூலியஸ் ஸீஸர் போர்க்களத்தில் அமோகமான வெற்றி பெற்றார். ஒரு பெரிய வரவேற்பையும் பெற்றார்.
10. 24-வது வயதில் நியூட்டன் புவிக்கு ஈர்ப்புச் சக்தி உண்டு என்ற உண்மையைக் கண்டுபிடித்தார்.

நீங்கள் உங்களுடைய வயதில்?!

(அறிவுச்சுடரில் மாணவர் அ. ரகிமான் 12-வது வகுப்பு)

FREE E- BOOKS , www.thamizham.net.,

## எமக்கு வந்தவை எமக்கு வந்தவை

***விழியைக் கீறும் இமைகள்*** தொகுப்பாசிரியர்: திண்டுக்கல் மேகதாசன் வெளியீடு: உண்ணாமலைப் பதிப்பகம், ஸ்டாலின் தெரு, அல்லி நகரம் (தேனி) 626 531 விலை ரூ. 1.0C.

***உதிர்க்கப் போவது எதனை?*** — ஆசிரியர்: அ. மார்க்ஸ், வெளியீடு: கைலாசபதி இலக்கிய வட்டம், தொடர்புக்கு: வெ. மு. பொதியவெற்பன், அ பெ. எண். 55, குடந்தை 612 001. விலை ரூ. 1.00

***அன்னம் விடுதூது*** (ஒரு பூரண மாத இதழ்) முகவரி:. 2, சிவன் கோயில் தெரு (தெற்கு) சிவகங்கை 623 560 தனிப்பிரதி ரூ. 1.50 ஆண்டு சந்தா ரூ 16.00

**HEALTH & HAPPINESS** – Siddha Gnani - Address: M/s Narmada Pathippakam, 10, Somasundaram St., T. Nagar, Madras-17. Price Rs. 7-00

***கண் திறக்குமா? குட்டிக் கதைகள்*** — விந்தன். வெளியீடு: புத்தகப் பூங்கா, 7, அருணாசலம் தெரு, சென்னை-600 030. விலை ரூ. 5.50

***வெற்றி நம் இதயத்திலே*** — மெர்லின் விலை ரூ. 4.90

***நக்ஸலைட்டுகள்*** — கே. ஏ. அப்பாஸ் விலை ரூ. 6.90 வெளியீடு: பூம்புகார் பிரசுரம் பிரஸ். 63, பிராட்வே, சென்னை-600 108

***எது கவிதை?*** — அ மார்க்ஸ். வெளியீடு: இராதா பதிப்பகம், கமலபவனம், திருவள்ளுவர் நகர் முதல் வீதி, புதுக்கோட்டை-622 001 விலை ரூ. 5/-

***தர்மபுரி எதிரொலிகள்*** — இரவிக்குமார். பாலன் பதிப்பகம் 21, ராஜு நாயுடு லே அவுட், காந்திபுரம், கோவை-641 012 விலை ரூ 4.00.

***தனித்தமிழ் எழுத்தாளர் அகரமுதலி*** — வெளியீடு: தனித் தமிழ்க் கழகம், தட்டாஞ்சாவடி, புதுச்சேரி-605 009 விலை ரூ. 1.50

***சிரகத்தின் சிறப்பு மருத்துவம்*** — டாக்டர் திருமலை நடராசன் முகவரி: M/s. சங்கீதவாணி வி. எம். தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004 விலை ரூ. 5.00

***ரத்ததானம்*** — கவிஞர் வைரமுத்து விலை ரூ. 6/-

***மௌனத்தின் சப்தங்கள்*** — கவிஞர் வைரமுத்து விலை ரூ. 7.50 இரண்டு நூல்களும் வெளியீடு: கலைஞன் பதிப்பகம், 10, ஹென்ஸ்மன் ரோடு, தியாகராய நகர், சென்னை-600 017

***கேக் ஐஸ்கிரீம் புட்டிங், ஜெல்லி ஜாம் தயாரிப்பது எப்படி?*** ஆசிரியர்: அனிதா ஜேம்ஸ். வெளியீடு: அருணோதயம், 3, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை-600 014

FREE E- BOOKS , www.thamizham.net.,



பத்திரப்படுத்து!!!

விரல் விரிக்கின்ற
விழியற்ற சோதரனே!
விரித்த விரல்மடக்கு –
இல்லாவிடில் –
எங்களைப்போலவே
இருப்பதையும் இழந்து
விடுவாய்...
பாதுகாப்பில் இருக்கின்ற
பாலகனையாவது
பத்திரப்படுத்து
ஏனெனில் –
நாளை அதுவும்
நவ இந்தியாவைப் பிரதி
பலிப்பதை
அனுமதிக்க முடியாது

-மேத்தாதாசன்


**பெண்களுக்கு பயனளிக்கும் சிறு தொழில்கள்** — சரோஜா சண்முகம் வெளியீடு : பூங்கொடிபதிப்பகம், 44, சித்திரைகுளம் மேற்கு வீதி, மயிலை, சென்னை-600 004

**தாழ்வு உணர்ச்சியைத் தகர்ப்பது எப்படி?** — ஆசிரியர் : முல்லை முத்தையா விலை ரூ. 3.50

**இந்தியக் குடிமகனின் உரிமைகளும், கடமைகளும்** — ஆசிரியர்: கு. இராஜாராம் விலை ரூ. 6-50

மேற்கண்ட இரண்டும் வெளியீடு : ஸ்டார் பிரசுரம், 72, பெரிய தெரு; திருவல்லிக்கேணி, சென்னை-600 005

**யோகாசன போதனை நூல்** — யோகி. என். ராஜன், வெளியீடு : தமிழ்நாடு பதிப்பகம், 36-3, சரோஜினி தெரு, தி நகர், சென்னை-600 017. விலை ரூ 4.50

**வரலாறு கண்ட வைக்கம் வீரர்** — மங்கையர்க்கரசி — மருதமலையான் பதிப்பகம், 33, பொன்னுசாமி நாயக்கன் தெரு, இராயப்பேட்டை, சென்னை-600 014

**மகிழ்ச்சியே மருத்துவம்** — பி. எஸ். ஆர். ராவ் வெளியீடு : நர்மதா பதிப்பகம். 10, சோமசுந்தரம் தெரு, தி. நகர், சென்னை-600 017. விலை ரூ. 5.50

'BELOVED ஆங்கில காதல் கவிதை தொகுப்பு வ.உ.சி. பப்ளிகேஷன்ஸ், சென்னை-3.


FREE E- BOOKS , www.thamizham.net.,

**சுற்றுலாப் பயணிகளின் வசதிக்கு...**

செங்கை மாவட்டம் திருக்கழுக்குன்றம் மலையடிவாரத்தில் வரும் தினசரி சுற்றுலா வரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்கென ஒரு மலக கழிப்பிடமும் குளியலறையும் கட்டப்பட்டு பல மாதங்கள் ஆகியும் திறக்கப்படாமல் உள்ளன. இதனை உடனடியாகத் திறந்து வைப்பதினால் பல சுற்றுலாப் பயணிகள் பயன் பெறுவதுடன் பொது மக்களுக்கும் பெரும் உதவியாக இருக்கும். இதில் தாமதம் செய்வது ஏன் என்பது தான் புதிராக உள்ளது.

—N. ஸ்ரீதர்

**ஆகஸ்டு 15**

மலட்டுப் பெண்ணுக்கு
37 வருடங்களாக
நாம்
நடத்திக் கொண்டிருக்கும்
வளைகாப்பு வைபவம்.

-சி. இரகுராமன்



**கொ. ச. பலராமனின் நூல்கள்**



- 'மனிதன் இருக்கிறான்'
  'சிறுகதைத் தொகுதி' விலை ரூ. 3-90
  'பாரத் புக் பீரோ' 74, பெரிய தெரு
  திருவல்லிக்கேணி, சென்னை-600 005
- 'முடியாத முற்றுப்புள்ளி' நாவல்
  விலை ரூ. 12-00, 'கவிதாபானு'
  54, போர்த்துக்கீசியர் மாதா கோவில் தெரு,
  சென்னை-600 001

சென்னையில் உங்களின் நம்பகம் வாய்ந்த பிரதிநிதியாய் செயல்பட விரும்புகிறோம். ஆலோசனைக் கட்டணம் ரூ. 5/- உடன் உங்களுக்கு செய்யவேண்டிய பணிகளின் விவரத்தினை தெரிவிக்க வேண்டிய முகவரி:—

**மைதிலி மோகன்,**

24, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், அம்பத்தூர்,
சென்னை-600 053.

FREE E- BOOKS , www.thamizham.net.,

**சுட்டி சந்தா விபரம் :**

- சுட்டி ஒவ்வொரு மாதமும் தவறாமல் முதல் தேதி வெளிவருகிறது.
- 12 இதழ்கள் அஞ்சலில் பெற சந்தா ரூ 5-00 மட்டுமே.
- எல்லாத் தொடர்புகளுக்கும் : ஆசிரியர் குழு, 'சுட்டி'
1494, அண்ணா நகர், சென்னை-600 040

**சுட்டி முன் இதழ்கள் :**

இதழ் எண்கள் 1 முதல் 8, 10, 11, 14, 16, 17, 19, 21, 22, 26 தவிர பிற இதழ்கள் யாவும் கிடைக்கும். பெற விரும்புவோர் இதழுக்கு 35 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பண விடை (M.O.) அனுப்பினால் எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.

**சுட்டி விற்பனையாளர்கள் :**

சுட்டி இன்னும் விற்பனையாகாத எல்லா இடங்களிலும் தேவை. எளிய விதிமுறைகள், தரமான கமிஷன் சுட்டியின் கொள்கைகளில் ஆர்வம் கொண்ட வாசகர்களுக்கு முன்னுரிமையுண்டு.

**சுட்டி இலவசம் :**

சுட்டியைப் படிக்காத நண்பர்கள் இருப்பின் அவர்களுக்குச் சுட்டியை எங்கள் செலவில் இலவசமாக அறிமுகப்படுத்தலாமே சுட்டியை நிச்சயம் வரவேற்கக் கூடியவர் எனில், அவர் முகவரியை தாருங்கள். உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் அவருக்குக் கிடைக்கச் செய்கிறோம்.

ஒருவர் எவ்வளவு நண்பர்களின் முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

**சுட்டியில் விளம்பரம் :**

செய்து பயனடையுங்களேன். மாதந்தோறும் பல்லாயிரக்கணக்கான விழிப்பான வாசகர்கள் சுட்டியைப் பார்க்கிறார்கள்; பரிமாறுகிறார்கள்; விவாதிக்கிறார்கள். பலரும் பாதுகாக்கிறார்கள் நல்ல விளம்பரங்களுக்கு உரிய பத்திரிகை சுட்டி!

சுட்டியில் மலிவு வரி விளம்பரமும் செய்யலாம். வரி விளம்பரங்களுக்குக் கட்டணம் வரிக்கு ரூ5 மட்டுமே.


* மது, சிகரெட்டு, பெண்களைப் போகப் பொருளாகக் காட்டி விற்பனை செய்யும் கவர்ச்சி விளம்பரங்கள் போன்றவை சுட்டியின் வெளியிடுவதற்கில்லை.

**சுட்டி இம்மாதம் வந்து சேரவில்லையா?**

ஒவ்வொரு மாதமும் முதல் தேதிக்குள் கிடைக்குமாறு சந்தாதாரர்களுக்கு சுட்டி அனுப்பப்படுகிறது. சந்தா முடிய ஒரு மாதம் முன்பும், சந்தா முடியும் மாதமும் (உடன் பணவிடைத் தாளும் இணைக்கிறோம்) அஞ்சல் உறையின் மேல் உங்களுக்கு அறிவிப்புச் சீட்டு ஒட்டப்படுவதைக் கவனிக்க மறவாதீர்கள். அப்படியும் சந்தா அனுப்பாதோர்க்கே சுட்டியை நிறுத்த நேர்கிறது.

சந்தா முடிய காலமிருந்தும் 15 தேதிக்குள் சுட்டி கிடைக்கப் பெறாதவர்கள் சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர் முகவரி) எழுதினால் மீண்டும் ஒருமுறை அனுப்புகிறோம். சில சமயம் அஞ்சலில் தவறுவது என்ன நடவடிக்கை எடுத்தும் தவிர்க்க முடியாதிருக்கிறது.

FREE E- BOOKS , www.thamizham.net.,





[illegible] 1494, [illegible] -40, [illegible] J. S. [illegible] -600 002.

FREE E- BOOKS , www.thamizham.net.,

சட்டு: மாத இதழ் I செப் 1984 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-56

http://www.thamizham.net FREE E - BOOKS (TAMIL)





# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.


FREE E- BOOKS , www.thamizham.net.,